**<u>அசல் வழக்கு எண்: 364/2022</u>**

The Witness sweared under Oaths Act 1969 on this the day of 24th day of July 2025
வா.சா.1 மேராஜிபேகம், க/பெ. ஷேக் காதர்,

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

இந்த வழக்கு கடன் வாங்குவதற்கு முன்னர் பிரதிவாதி வேறு கடன் கொடுக்கல் வாங்கல் இருந்தது என்றால் சரிதான். மற்ற கடன்கள் அனைத்தையும் பிரதிவாதி பைசல் செய்துவிட்டார் என்றால் சரிதான். உண்மையில் பிரதிவாதி என்னிடம் எந்த கடனும் பெறவில்லை என்றும் எனது தம்பி அஸ்கர் அலி நடத்திய சீட்டு தொகை பாக்கி தொகைக்காக இந்த வழக்கு அடமான பத்திரம் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. எனது தம்பி கூறியதன் பேரில் தான் நான் இந்த வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் பிரதிவாதி கடன் தொகையை கேட்டும் கொடுக்காததால் எனது கணவர் கூறியதன் பேரில் தாக்கல் செய்தேன். பிரதிவாதி பேரில் உள்ள கிரைய பத்திரம் அசல் வழக்கு தாக்கல் செய்யும் போது தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய பத்திரம் எப்போது கிடைத்தது என்றால் அது வழக்கறிஞரிடம் வழக்கு தாக்கல் செய்யும் போதே கொடுத்திருந்தோம். அவர் தேடி பார்த்து பின்னர் வழக்கில் தாக்கல் செய்தார். அசல் வழக்கு தாக்கல் செய்யும் போது வா.சா.ஆ.2 தாக்கல் செய்யபடாத விவரம் எனக்கு தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. வழக்கு தாக்கல் செய்யும் போது நான் பிராதை படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். தற்போது வழக்கில் தாக்கல் செய்துள்ள எனது நிரூபண வாக்குமூலத்தில் நான் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். உண்மையில் பிரதிவாதி அவரது அசல் கிரைய பத்திரத்தை எங்களிடம் ஒப்படைக்கவில்லை என்றும் நானும் எனது கணவரும் எனது தம்பியும் அவரை அடித்து துன்புறுத்தி அவரிடம் இருந்து கிரைய பத்திரத்தை வலுகட்டாயமாக வாங்கினோம் என்றால் சரியல்ல. உண்மையில் பிரதிவாதி என்னிடம் எந்த கடனும் பெறவில்லை என்றும் சீட்டு தொகை பாக்கிக்காக இந்த வா.சா.ஆ.1 பொய்யாக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. எனவே இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது. மறு விசாரணை இல்லை.**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்<br><br>Sd/- S. Senthilbabu,<br>சார்பு நீதிபதி,<br>போளூர். |